[*2019 ஜூலை 17*

எங்கள் கொங்குநாட்டின் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, தங்களையும் வணங்குகிறேன். கோயம்புத்தூரில் மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் அருள்மிகு கோணியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் வெளியூர், உள்ளூர் பக்தர்கள் அதிகமாக சாமி தரிசனம் செய்கிறார்கள். ஆகையால் அந்தக் கோயிலுக்கு தங்க ரதம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். மேலும், இக்கோயிலுக்கு நிதியும், தங்கமும் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று திருக்கோயிலின் வருமானம் அடிப்படையில், தேவையிருப்பின் துறைரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அந்தத் திருக்கோயிலுக்கு தங்கத் தேர் செய்வது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) 'நீட்' தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக்கோரும் இரண்டு மசோதாக்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது குறித்து மத்திய அரசின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

2019 ஜூலை 17]

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான NEET தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்களிக்க வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இரண்டு மசோதாக்களை *22–9–2017* அன்று திருப்பியனுப்பிவிட்டோம் என்று மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் துணைச் செயலாளர் திரு. ராஜேஷ் எஸ். வைத்யா அவர்கள் நேற்றையதினம் உயர் நீதிமன்றத்தில் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். இந்த நிலையில், இந்த இரு மசோதாக்களையும் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் நிராகரித்துவிட்டார் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அந்த அறிக்கையிலே உயர் நீதிமன்றத்திற்கும் தெரிவித்திருக்கிறார். ஆக, அரசியல் சட்டம் *201*–வது பிரிவின்கீழ் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஒரு மசோதாவை withheld செய்திருக்கிறார் என்று சொன்னால், அது நிராகரிப்பதுதான். மசோதாக்களை மக்கள் பிரதிநிதிகள் நிறைந்த சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்புவதால், சட்டமன்றத்தினுடைய இறையாண்மை கருதி, "நிராகரிப்பு" என்ற வார்த்தை இடம்பெறாமல் "withheld" என்று அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிக் கூறப்படுவதற்கு இன்னொரு மிக முக்கியக் காரணம் என்னவென்று கேட்டால், அதுமாதிரி குடியரசுத் தலைவர் நிராகரிக்கும் மசோதாக்களை மீண்டும் *6* மாதத்திற்குள் இந்த அவையிலே நிறைவேற்றி, குடியரசுத் தலைவருடைய ஒப்புதலைப் பெறக்கூடிய வகையில் நாம் அனுப்பிவைத்து, அந்த அதிகாரத்தை அரசியல் சட்டம் பிரிவு *201*–ன்கீழ் இந்தப் பேரவைக்கு அளிப்பதுதான் முறை. ஆனால், அந்த அதிகாரத்தை அரசு பயன்படுத்தாமல் இன்றைக்கு மசோதாக்களை திருப்பி அனுப்பி *21* மாதங்களுக்கு மேலாகியிருக்கிறது. நாங்கள் குடியரசுத் தலைவர் அவர்களிடம் காரணம் கேட்டிருக்கிறோம் என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இதே அவையில் குறிப்பிட்டிருக்கிறார். அந்தக் கடிதத்தை இந்த அவையில் இதுவரை அவர் வைக்கவில்லை. "மசோதாக்கள் மத்திய அரசிடமிருந்து திரும்பி வந்த பிறகு கடிதம் எழுதி என்ன பயன்?" என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, காரணம் கேட்டு ஒரு கடிதத்தை எழுதி ஏழரை கோடி மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற சட்டமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை நீங்கள் முறையாகச் செய்யத் தவறிவிட்டீர்கள் என்று நான் பகிரங்கமாக குற்றஞ்சாட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நான் இப்போது கேட்க விரும்புவது, புதிதாக இதே அவையில் மீண்டும், இன்னொருமுறை இதுசம்பந்தமான

[திரு. மு.க. ஸ்டாலின்] [2019 ஜூலை 17

2 மசோதாக்களையும் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை நான் அரசிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET தேர்வைப்பற்றி ஏற்கெனவே இந்த அவையில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற வழக்கு சம்பந்தமாக இன்றைக்கு பத்திரிக்கை வாயிலாக வந்திருக்கும் செய்தி மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துகளை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். நான் அன்றைக்கே சொல்லியிருக்கின்றேன்; எந்தத் தகவலையும் இந்த அவைக்கு அரசு மறைக்கவில்லை. வந்த தகவலை தெளிவாக இந்த அவைக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். 22–9–2017 அன்று மத்திய அரசாங்கத்தால் "திருப்பி அனுப்பப்பட்ட", திருப்பி அனுப்பப்பட்ட என்ற வார்த்தை இல்லை; 'withheld' என்று சொல்லி திருப்பி அனுப்பப்பட்ட Bill என்பது—நீங்கள் இப்போது நடைபெறுகின்ற சட்டமன்றத்தில் இந்தக் கேள்வி எழுப்பவில்லை. ஏற்கெனவே இந்தக் கேள்வியை நீங்கள் எழுப்பியபோது, அப்பொழுதே மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் உங்களுக்கு இந்த விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அன்று விளக்கம் சொல்லும்போதே நான் அதைச் சொன்னேன். ஏற்கெனவே நாங்கள் இதைச் சொல்லியிருக்கிறோம், மத்திய அரசாங்கம் 'withheld' என்று சொல்லி திருப்பியனுப்பியிருக்கிறது. இதுகுறித்து நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது; அந்தக் காரணங்களைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். இன்றுவரை பதில் வரவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறோம். காரண, காரியங்கள் தெரிந்தால்தான் அந்த மசோதாவில் என்ன குறை இருக்கிறது, என்ன காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது, உங்களுடைய வார்த்தையை எடுத்துக்கொண்டால், நிராகரிக்கப்பட்டது; இப்பொழுதுதான் அதுவும், அரசாங்கத்திற்கு இதுவரை எந்தத் தகவலும் வரவில்லை.

2019 ஜூலை 17] [திரு. சி.வி. சண்முகம்]

முற்பகல் 11–25

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய விஷயம் என்னவென்றால், இன்றைய தேதி வரை மத்திய அரசாங்கத்திலிருந்து—உயர் நீதிமன்றத்திலே withheld என்றால் நிராகரிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் கடந்த வாரம் e-mail-ல் வந்த தகவலைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் நேற்று தாக்கல் செய்திருக்கின்ற பிரமாணப் பத்திரத்திலே, அந்த affidavit–லே, "withheld and returned the Bill" என்றுதான் சொல்லப்பட்டுள்ளது; 'rejected' என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. நேற்றுகூட, (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். நீங்கள் சொன்ன எதையும் நான் மறுக்கவில்லை. என்ன நடந்தது என்பதைச் சொல்கிறேன். கடந்த வாரம் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, withheld என்றால்,—e-mail–ல் வந்ததை நான் படித்தே காண்பிக்கிறேன்.

"As per our telecom today at 2.10 PM., I am to say that assent to said Bills was withheld by Hon'ble President of India, i.e.The Hon'ble President of India has rejected these Bills i.e. he has not passed the Bills, but rejected them."

இது e-mail-ல் வந்த தகவல். 22–9–2017 ஆம் தேதிக்குப் பிறகு 2 ஆண்டு காலமாக தமிழக அரசின் சார்பாகப் பல்வேறு கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தக் கடிதங்களுக்கு எந்தவிதமான பதிலும் மத்திய அரசாங்கத்திடமிருந்து இன்றைய தேதி வரை வரவில்லை. இந்தத் தகவலைக்கூட, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நேற்று அவர்கள் தாக்கல் செய்த affidavit–ல் 'rejected' என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை; அவர்கள் oral ஆகத்தான் சொன்னார்கள். ஆனால், நேற்று பிரமாணப் பத்திரம்மூலம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அவர்கள் சொல்லியிருப்பது என்னவெனில்,

"The Government of Tamil Nadu were placed for both the Bills, Tamil Nadu Admission to M.B.B.S. and B.D.S. Courses Bill of 2017 and Tamil Nadu Admission to Post Graduate Courses in Medicine and Dentistry Bill of 2017 along with the reports, papers received from various Ministers,

Departments and Government of Tamil Nadu were placed for consideration for the Hon'ble President of India in the form of summary signed by the Union Ministry of Home Affairs on 11-9-2017. The Hon'ble President has withheld his assent for the Tamil Nadu Admission to M.B.B.S. and B.D.S. Courses Bill of 2017 and Tamil Nadu Admission to Post Graduate Courses in Medicine and Dentistry Bill of 2017. Both the Bills were accordingly returned to Government of Tamil Nadu vide this Ministry's Letter."

எங்கேயும், எந்த வார்த்தையும் (குறுக்கீடு) இருங்கள், ஏன் அவசரப்படுகிறீர்கள்? நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு உங்கள் கருத்துகளைச் சொல்லுங்கள். E-mail-ல் "withheld" means "rejected" என்று சொல்கிறார்கள். ஆனால், பிரமாணப் பத்திரம் மூலமாகத் தாக்கல் செய்யப்பட்ட affidavit–ல், எங்கேயும் withheld–ஐ rejected என்று சொல்லவில்லை; Returned என்று சொல்லிவிட்டார்கள். 22–9–2017 அன்று return வந்துவிடுகிறது. 22–9–2017 அன்று அவர்கள் அனுப்பிய கடிதத்தில், 'withheld and returned the Bill' என்று வந்ததை நான் அன்றைக்கே சொல்லிவிட்டேன். நீங்கள் கடிதங்கள் எழுதினீர்களா? என்று கேட்டீர்கள். உங்களுக்கு 6 மாத காலம் இருந்தது என்றீர்கள். ஆமாம், 6 மாத காலம் இருக்கிறது; ஒப்புக்கொள்கிறோம். ஜனாதிபதி அவர்களிடமிருந்து Bill–ஐ திரும்பப்பெற்றால், சட்டமன்றத்திலே 6 மாத காலத்திற்குள்ளே, ஏதாவது குறைகள் இருந்தால், அதனை நிவர்த்தி செய்து, மீண்டும் மறுபரிசீலனைக்கு நாம் அந்த Bill–ஐ அப்படியே அனுப்பலாம்; இல்லையென்றால், அதிலே திருத்தங்கள் செய்து மீண்டும் ஜனாதிபதி அவர்களுடைய ஒப்புதலுக்குத் திருப்பியனுப்பி வைக்கலாம். ஆனால், இதிலே நமக்கு எந்த இடத்திலேயும், நாம் வந்து—22–9–2017 அன்று withheld என்று வருகிறது. உடனடியாகத் தமிழக அரசு 25–10–2017 அன்று மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதுகிறது. அதில்,

"I am directed to invite attention to the reference 3rd cited and to request that the Government of India may be so good as to state the reason for withholding the Hon'ble President's assent for the Tamil Nadu Admission to M.B.B.S. and B.D.S. Courses Bill of 2017 and the Tamil Nadu Admission to Post Graduate Courses in Medicine and Dentistry Bill of 2017, so as to enable this Government to reconsider the matter in the light of those reasons and to decide further course of action to be taken in the matter."

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

2019 ஜூலை 17] [திரு. சி.வி. சண்முகம்]

முற்பகல் 11–30

காரணங்களை நீங்கள் தெரிவித்தால், அந்தக் காரணங்களை நிவர்த்தி செய்து, அதனை மீண்டும் மறுபரிசீலனை செய்து அனுப்புவதற்கு எங்களுக்கு வசதியாக இருக்கும் என்றும், காரணங்களை நீங்கள் சொல்ல வேண்டும் என்றும் கோரி 25–10–2017 அன்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். 12–12–2018–ல் ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். அதற்குப்பிறகு 31–5–2018, 10–9–2018, 23–10–2018, 20–11–2018, 1–1–2019, 14–3–2019, 14–6–2019 ஆகிய தேதிகளிலும் கடிதங்கள் அனுப்பப்பட்டு உள்ளன. கடைசியாக இந்தச் சட்டமன்றத்திலே நாம் விவாதம் செய்தது, 8–7–2019 அன்றுதான் NEET பற்றிய விவாதத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி, நானும் பதில் சொன்னேன். ஆனால், அதற்கு முன்பு 5–7–2019–ல் மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதத்தை மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசு எழுதியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கேயுமே நாங்கள் மறைக்கவில்லை. நாம் இந்த அவையிலே அதுசம்பந்தமாக இரண்டு மசோதாக்களை நிறைவேற்றி ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது உண்மை. 22–9–2017–ல் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து அது நிறுத்தி வைக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டதும் உண்மை. 25–10–2017 அன்று, ஏன், எந்தக் காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டது என்பதற்கான காரணத்தை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லி கடிதம் எழுதப்பட்டதும் உண்மை. அதன் தொடர்ச்சியாக, 12 நினைவூட்டுக் கடிதங்களை தமிழக அரசு மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சில உறுப்பினர்கள் இருக்கையில் அமர்ந்தவாறே அமைச்சரின் பேச்சினிடையே பேசிக்கொண்டிருந்தனர்.)

கடைசியாக கடந்த 5–7–2019 அன்று கடிதம் எழுதியிருக்கிறோம். இதுதான் உண்மை. நீங்கள் சொன்னீர்களே ஒரு சட்டம். அது உண்மைதான். அதை நான் இல்லையென்று சொல்லவில்லை. அந்தச் சட்டம் என்ன சொல்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: நான் எதுவும் தவறாகச் சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்)

[*2019 ஜூலை 17*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்பி, அதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவர் விளக்கங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உட்கார்ந்தவாறே அதை comment செய்துகொண்டிருப்பது முறையா? இதுமாதிரி செய்தால் நான் அதை serious ஆக எடுத்துக்கொண்டு, கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 200 மற்றும் 201 பற்றிச் சொல்லியிருக்கிறார். அது உண்மை. அதில் எந்தவித மாற்றுக் கருத்துமே இல்லை. அதில் யாரும் மாற்றுக் கருத்து தெரிவிக்க முடியாது. 6 மாதங்களுக்குள்ளாக திருப்பி அனுப்பப்பட்டால், அதை மீண்டும் நிறைவேற்றி அனுப்புவதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. நான் இல்லையென்று சொல்லவில்லை. அந்த மசோதா நமக்கு எப்போது திருப்பி அனுப்பப்பட்டது? திருப்பி அனுப்பப்படும்போது எந்தக் காரணமும் அதற்கு சொல்லப்படவில்லை. இதற்காக, இதில் இந்தக் குறை இருக்கிறது; இதை இந்தக் காரணத்திற்காக நாங்கள் நிராகரித்திருக்கிறோம் என்று சொன்னால்தான், உடனே நாம் அதை நிவர்த்தி செய்து, அதைச் சரிசெய்து amend செய்து, நாம் அனுப்ப முடியும். மீண்டும் அதே Bill–ஐ திருப்பி அனுப்பினால், அவர்கள் திரும்பவும் reject–தான் செய்வார்கள். அதற்காகத்தான் நாம் என்ன காரணம் என்று கேட்கிறோம்.

Articles 200 and 201 என்ன சொல்கிறதென்றால், Articles 200 and 201 of the Constitution deals with grant of assent to such Bills state that the President could either give assent to the Bill or withhold assent. In the event of the assent being withheld, the Bills would be returned to the State Legislature for reconsideration. திருப்பி அனுப்புவது என்ன காரணத்திற்காகவென்றால், மீண்டும் அதை reconsideration செய்வதற்கு. Reconsider செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுவிட்டோம். 'என்ன காரணத்திற்காக நீங்கள் அதைத் திருப்பி அனுப்பினீர்கள்?' என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அதைத்தான் நான் படித்துக் காட்டினேன். For reconsideration

2019 ஜூலை 17] [திரு. சி.வி. சண்முகம்]

என்று Article சொல்கிறது. After being returned, the Legislature could pass the Bills once again with or without any amendment and present them again to the President for his consideration. For consideration என்று சொல்லப்பட்டிருக்கிறது. Reconsideration–க்கு எங்கே காரணம் இருக்கிறது? மத்திய அரசாங்கம் அதைச் சொல்லவில்லை.

இன்னொரு விளக்கமும் சொல்கிறேன். இதுவரையில் எந்த விளக்கமும் அரசாங்கத்திற்கு வரவில்லை. இன்றுவரையில் அரசாங்கத்திற்கு எந்தவிதத் தகவலும் வரவில்லை. *22–9–2017* அன்று வந்த தகவலைத் தவிர, இதுவரை தமிழக அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை. நாங்கள் *12* நினைவூட்டுக் கடிதங்கள் எழுதிவிட்டோம். எந்த பதிலும் இதுவரை எங்களுக்கு வரவில்லை. பதில் வந்தால், அதற்குக் காரணங்களைச் சொன்னால், அதை நிவர்த்தி செய்து, உடனடியாக இந்த மசோதாவை கண்டிப்பாக இந்த அரசு நிறைவேற்றும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இந்த வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார். இது தமிழ்நாட்டு மாணவர்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை. எங்களுடைய நிலைப்பாடு NEET வேண்டாம் என்பதுதான்; உங்களுடைய நிலைப்பாடு NEET வேண்டாம் என்பதுதான்; NEET வரக் கூடாது என்பதுதான் நம் எல்லோருடைய கருத்தும், நிலைப்பாடும். நாம் ஒரு மசோதா அனுப்பிவிட்டோம். அதைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். அதற்கு எந்த ஒரு காரணமும் சொல்லவில்லை. நாம் இத்தனை நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியும், அவர்களிடமிருந்து எந்தவித காரணமும் வராமல் இருப்பதாலும், நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு சென்றுவிட்ட காரணத்தினாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, சட்ட வல்லுநர்களிடமும் கலந்து பேசி, ஏன் என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரிவிக்கவில்லை? அந்தக் காரணங்கள் எங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். மீண்டும் இந்த மசோதாவை நாங்கள் நிறைவேற்றுவதற்காக, எங்களுக்குக் காரணங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லி, கடைசியாக ஒரு நினைவூட்டுக் கடிதத்தை அனுப்புவோம். இல்லையென்றால், வழக்கைத் தொடருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயங்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2019 ஜூலை 17

முற்பகல் 11–3.5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல விளக்கங்களை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பல கடிதங்கள் எழுதியிருக்கிறீர்கள். நான் அதை மறுக்கவில்லை. நீங்கள் அதை ஆதாரத்தோடு, தேதிவாரியாகச் சொல்கிறீர்கள். ஆனால், 2 ஆண்டு காலமாக அதற்குத் தர வேண்டிய அழுத்தத்தை ஏன் தரவில்லை? எத்தனையோ முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்கள் சென்றிருக்கிறார்கள். அப்போது ஏன் இதுகுறித்து அழுத்தம் தரவில்லை என்பது ஒரு கேள்வி.

அடுத்து, நேற்றையதினம் சென்னை உயர் நீதிமன்றத்திலே மத்திய அரசினுடைய வழக்கறிஞர் தாக்கல் செய்திருக்கக்கூடிய வாசகம்–அவர் reject செய்யவில்லை; அப்படி ஒரு வார்த்தையே இல்லை என்று சொல்கிறார்–இதில் நான் ஒன்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். 'Both the learned Counsels for the Union of India submit that on that clarification sought for, as to whether the Bills were withheld or rejected, Under Secretary, Ministry of Home Affairs, has stated that the Bills have been rejected' என்று தெளிவாக இருக்கிறது. அந்த வார்த்தையே இருக்கிறது. ஆனால், இல்லையென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறார்கள்.

இப்பொழுதுகூட நான் சொல்கிறேன். 201 பிரிவின்படி மீண்டும் நாம் ஏற்கெனவே நிறைவேற்றிய அந்த சட்ட மசோதாவைப் பற்றி வலியுறுத்துவதற்கு 201 பிரிவின்படி வாய்ப்பு இல்லை. ஏனென்றால், 2 வருடங்களாக அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்துவிட்ட காரணத்தினால். ஆனால், இப்பொழுதும் நான் கேட்கிறேன்; நடந்தது நடந்தவைகளாக இருக்கட்டும். இது மாணவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை. இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு இன்னும் 3 நாட்கள்தான் இருக்கின்றன. இந்த NEET பிரச்சினை தொடர்பாக இப்பொழுது புதிய இரண்டு மசோதாக்களை இந்தக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றி, மீண்டும் வலியுறுத்தக்கூடிய

2019 ஜூலை 17] [திரு. மு.க. ஸ்டாலின்]

வகையிலே மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பி வைக்குமா என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருப்பது நேற்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட affidavit. அவருடைய attestation. இது Raju S. Vaidya, S/o Shri Satish Barkova Vaidya, aged 55 years, working and posted as Deputy Secretary, Ministry of Home Affairs அவர்களுடைய affidavit. எனக்கு கொடுக்கப்பட்டதை நான் சொல்கிறேன். நீங்கள் சொல்வது இருந்தாலும், நான் அதை சரி பார்த்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்று, withheld என்பது Bill return ஆகியிருந்தால் implied ஆக we can take it as rejected. அதாவது, silent ஆக இருந்தது என்றால், we can take it as implied. But, withheld என்ற வார்த்தை போடப்பட்டதால், காரண காரியம் நமக்குச் சொல்லப்படாததால், அந்தக் காரணங்களையும், என்ன காரணத்திற்காக அந்த மசோதா திருப்பி அனுப்பப்பட்டது. அதில் என்ன குறைகள் இருக்கின்றன என்று சொன்னால்தான், நாங்கள் அதை மீண்டும் நிவர்த்தி செய்ய முடியும். நீங்கள் சொன்னதுபோல், நாங்கள் Bill–ஐ pass செய்யலாம். மசோதாவில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால், நாம் ஏற்கெனவே அனுப்பிய மசோதாவை அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டார்கள். திருப்பி அனுப்பப்பட்ட மசோதாவில் என்ன குறை என்று தெரியாமல் எப்படி அதை rectify செய்வீர்கள்? திரும்பவும் அந்த Bill–ஐ, as it is நாம் அப்படியே அனுப்பினோம் என்றால், அதேதான் பதில் வரும். எனவே, அதற்கான காரணத்தை அவர்கள் நமக்குச் சொல்லட்டும். இந்தக் காரணத்திற்காக, இந்தக் குறையினால், இந்த மசோதா நிராகரிக்கப்பட்டிருக்கிறது; திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொல்லட்டும். அது அவர்களுடைய கடமை, சொல்ல வேண்டும். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். அவர்கள் சொல்ல வேண்டும், அது அவர்களுடைய கடமை; சொல்ல வேண்டும். (குறுக்கீடு) ஆனால், அதைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) இருங்கள், அவசரப்படாதீர்கள். அவர்கள் சொல்லவில்லை. அதைத்தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். சொல்லவில்லையென்றால், இப்போது நீதிமன்றத்தின் மூலமாக வழக்கைத் தாக்கல் செய்து, இந்த மசோதா ஏன், எதற்காகத் திருப்பி அனுப்பப்பட்டது. அந்த மசோதாவில் ஏதாவது குறைகள் இருந்தால், அந்தக் குறைகளை

எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று நாம் நீதிமன்றத்திலே கேட்டு, அந்தக் குறைகளையும் அவர்கள் சொன்னால், அதை நிவர்த்தி செய்து, உடனடியாக மசோதாவை நிறைவேற்றுவதிலே இந்த அரசுக்கு எந்தத் தயக்கமும் இல்லை, எந்த பயமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுடைய நலனுக்காக இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு அரசு எந்த நேரத்திலும், எப்போதும் தயாராக இருக்கிறது.

அவர் இன்னொன்றையும் சொன்னார். மசோதாவை நிறைவேற்றிவிட்டு நீங்கள் இரண்டு ஆண்டு காலம் சும்மா இருந்தீர்கள், எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார். இது ஒன்றும் புதியது இல்லை. இது ஒன்றும் புதியது கிடையாது. இது எல்லா அரசாங்கத்திலும் நடப்பதுதான். என்னவோ எங்களது அரசாங்கத்தில் மட்டும் நடந்துவிட்டதுபோல் பேசுகிறீர்கள். உங்கள் ஆட்சியிலும், 2009 ஆம் ஆண்டு ஒரு சட்டம் போட்டீர்கள். Tamil Nadu Business Facilitation Act என்று ஒரு சட்டத்தைப் போட்டீர்கள். ஒரு சட்டத்தைப் போட்டு, அதோடு மறந்துவிட்டீர்கள். அதோடு மக்களும், உங்களை மறந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களும் மறந்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) 2014 ஆம் ஆண்டு, அந்த Bill–ஐ withheld என்று return செய்கிறார்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டு பேசினால் எப்படி?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: நீங்கள் இயற்றிய சட்டம், Tamil Nadu Business Facilitation Act, 2009 (குறுக்கீடு) அதை 2014–ல் withheld என்று சொல்லித் திருப்பி அனுப்புகிறார்கள். இதை எதற்காக நான் சொல்ல வருகிறேன் என்றால், உங்களைக் குறை சொல்வதற்காக இல்லை. (குறுக்கீடு) உங்களைக் குறை சொல்வதற்காக இல்லை. இது சகஜம். இது காலம் காலமாக நடைபெறுகின்ற நிகழ்வுதான் என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சொன்னேனே தவிர, உங்களைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். (குறுக்கீடு) நேரமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 17]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) எதிர்க்கட்சி (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் பேசுகிறார்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் குறுக்கே பேசினால் எப்படி? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை; உணர்வுப்பூர்வமான பிரச்சினை. தமிழ்நாட்டில் இருக்கின்ற மாணவர்களுடைய நலன் கருதி எல்லோரும் ஒருமித்த கருத்தோடு NEET தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்களிக்க வேண்டும்; தமிழகத்தில் NEET தேர்வு நடைபெறக் கூடாது என்ற அடிப்படையிலேதான் நாம் இவ்வளவு வாதங்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அழுத்தம் கொடுக்கவில்லையென்று சொன்னார்; ஒவ்வொரு முறையும் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கின்றபொழுது, இதை வலியுறுத்தி Memorandum கொடுத்திருக்கின்றோம். அவரிடம் நேரடியாகவும் இதை நாங்கள் தெரிவித்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்ல; பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்துவிட்டு வந்தபிறகு, அவரிடத்திலே நாங்கள் என்ன Memorandum கொடுத்தோமோ, அதை தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் கொடுத்து, இதற்கு நாங்கள் அழுத்தம் கொடுத்திருக்கின்றோம் என்பதைத் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். எப்பொழுதெல்லாம் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கிறதோ, அப்பொழுதெல்லாம் NEET தேர்வு தமிழகத்தில் இருக்கக் கூடாது. NEET தேர்வினால் கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 17

ஆகவே, தமிழகத்திற்கு NEET தேர்விலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், என்ன காரணம் என்று தெரிந்தால்தான், அதை நிவர்த்தி செய்வதற்கு வழிவகை உண்டு என்று இப்பொழுது சொன்னார். மீண்டும் ஒரு தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்புவோம். என்ன காரணம் என்று தெரியாமல் இதேமாதிரி reject செய்தால் நாம் என்ன செய்ய முடியும்? ஆகவே, காரணம் என்னவென்று அவர்கள் தெரிவித்தால்தான், அந்தக் காரணத்தை அறிந்து நாம் நிவர்த்தி செய்து, அந்த மசோதாவை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப இயலும். அதிலே ஏதாவது குறைபாடுகள் இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டினால், அதற்கேற்றவாறு மீண்டும் திருத்தம் மேற்கொண்டு, தீர்மானத்தை நிறைவேற்றி அந்த மசோதாவை அனுப்பினால்தான், அதற்கொரு விடிவு காலம் பிறக்கும். அதனடிப்படையிலேதான் அவர் சொல்கிறாரே தவிர, வேறல்ல. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டது. இந்த மசோதா என்ன காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டது என்பதற்கான பதில் இதுவரை வரப்பெறவில்லை. பலமுறை கடிதம் எழுதப்பட்டுவிட்டது. அந்தக் கடிதத்திற்கு இதுவரை மத்திய அரசிடமிருந்து எந்த பதிலும் வரப்பெறவில்லை. நீதிமன்றத்திலே அவர்கள் நேற்றையதினம் தெரிவித்திருக்கின்றார்கள். அதனடிப்படையிலேதான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இப்பொழுது மீண்டும் நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டு, அதற்கும் பதில் வரவில்லையென்றால், சிறப்புக் கூட்டம் ஒன்றும் கூட்டலாம். தவறு ஒன்றும் கிடையாது. நம்முடைய மாணவர்களுடைய நலனில் உங்களுக்கு எப்படி அக்கறை இருக்கின்றதோ, அதே அக்கறை எங்களுக்கும் இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழகத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த மாணவர்களுடைய நலன் கருதி எடுக்கின்ற முடிவு என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இதோடு முடியட்டும். (குறுக்கீடு) நான் இந்தப் பிரச்சினையை மேற்கொண்டு பேச அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்

திரு. ஜெ. அன்பழகன், நேரமில்லை; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தப் பிரச்சினையை எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பினார். அவர் பேசுவதற்குப் போதிய வாய்ப்பை நான் அளித்துவிட்டேன். ஒவ்வோர் உறுப்பினரும் எழுந்து அதுகுறித்துப் பேச முடியாது. (குறுக்கீடு) நேரமில்லை, திரு. சக்கரபாணி அவர்களே, நேரமில்லை. ஒவ்வோர் உறுப்பினரும் எழுந்து அதற்கு விளக்கம் கேட்க வேண்டும்; நாங்களும் பேச வேண்டுமென்று சொன்னால், அதை நான் அனுமதித்தால் அவையை நடத்த முடியுமா? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசினார். அவருக்கு நான் போதிய வாய்ப்பைக் கொடுத்தேன். அவர் கேள்வி கேட்டார். அதற்கு அமைச்சர் பதில் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான். இதிலே ஒவ்வோர் உறுப்பினரும் உங்களுடைய கட்சி சார்பாக எழுந்து, நாங்கள் பேச வேண்டுமென்று சொன்னால், என்னால் எப்படி அனுமதிக்க முடியும்? ஆகவே, NEET தேர்வு சம்பந்தமான இந்த விவாதத்தை இதோடு நான் முடித்துக்கொள்கிறேன். நான் அடுத்த subject–க்குப் போகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காரணத்தைக் கேட்டிருக்கிறோம்; அதற்கு என்ன காரணம் என்ற செய்தி வந்ததற்குப் பிறகு முடிவு எடுப்போம் என்று சொல்கிறார். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், கடந்த 2 வருடங்களாக நீங்களும் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறீர்கள். நேரடியாகவும் சென்று அழுத்தம் தந்ததாக இங்கே சொல்லியிருக்கிறீர்கள். ஆக, அப்போதே அந்தக் காரணத்தை அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். இதுவரை அதற்கான காரணத்தைச் சொல்லவில்லை. மீண்டும் அதே நிலை நீடித்தால் அடுத்து என்ன நிலை? அதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–45

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் நீதிமன்றத்திலே

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 17

அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். நேற்றையதினம்தான் அது என்னவென்று தெரிவித்திருக்கிறார்கள். திருப்பி அனுப்பப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, என்ன காரணத்திற்காக திருப்பி அனுப்பப்பட்டது என்று சொல்லவில்லை. இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கப்பெறவில்லை. அதற்காகத்தான் நாங்கள் கேட்கின்றோம். ஏனென்றால், நீதிமன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு செய்தியைச் சொல்லி, நீதிமன்றத்தின் வாயிலாகப் பத்திரிகையில் எல்லாம் வெளிவந்திருக்கின்றது. ஆகவே, நீதிமன்றத்தில் வந்த செய்தியின் அடிப்படையில், என்ன காரணத்திற்காக இது திருப்பியனுப்பப்பட்டது என்ற விவரத்தைக் கேட்பதற்குத்தான் நான் இந்த விவரத்தைச் சொன்னேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இந்தப் பிரச்சினை இதோடு போதும். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை இதோடு போதும். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், நீங்கள் இதையெல்லாம் கேட்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் இது சம்பந்தமாகப் பேச வேண்டாம். நீட் சம்பந்தமான இந்தப் பிரச்சினையை சபையில் விவாதிப்பதை இத்துடன் முடித்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இது சம்பந்தமாகவா அல்லது வேறு ஏதாவதா? (குறுக்கீடு) சரி பேசுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய Clarification. மத்திய அரசின் சார்பாக வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கின்றார்கள். தமிழக அரசின் சார்பில் நீதிமன்றத்தில் உங்களுடைய வழக்கறிஞர் ஆஜராகி இருக்கின்றாரா? அப்படி ஆஜராகி இருந்தால் இந்தப் பிரச்சினை உங்களுக்கு முன்பே தெரிந்திருக்கும். ஆகவே, தமிழக அரசின் சார்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகி இருக்கின்றார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக இந்த வழக்கில் மூத்த வழக்கறிஞர் ஆஜராகி வாதாடிக் கொண்டிருக்கின்றார் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றுகூட Advocate General வந்தார்.

2019 ஜூலை 17] [திரு. சி.வி. சண்முகம்]

இதைப்பற்றி நாங்கள் கலந்து பேசினோம். அதைத்தான் நான் கோடிட்டுக் காட்டினேன். அதைத்தான் முழுமையாகச் சொல்ல வேண்டாம் என்பதற்காகக் கோடிட்டுக் காட்டினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, 12 முறை நம்முடைய அரசின் சார்பில் நினைவூட்டுக் கடிதங்கள் எழுதிய பிறகும் மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏன், எந்தக் காரணத்திற்காக அது திருப்பியனுப்பப்பட்டது என்று எந்த பதிலும் வரவில்லை. கடைசியாக ஒரு முறை நாம் அவர்களுக்குக் கடிதம் எழுதி கேட்டுவிட்டு, நீதிமன்றத்தின்மூலம் நாம் இதற்கு நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. அதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு மேற்கொள்ள இருக்கின்றோம். இந்த வழக்கை முழுமையாக தமிழக அரசு உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறது. அரசின் சார்பில் வழக்கறிஞர்கள் அங்கே ஆஜராகிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உள்ளாட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தால் செயலாக்க மானியம் வழங்கவில்லை என மத்திய அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இந்தப் பிரச்சினையை இத்துடன் முடித்துக்கொள்ளலாம். மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கரி. இராமசாமி அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், வேறு பிரச்சினை பற்றித்தானே பேசப் போகின்றீர்கள்?*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உள்ளாட்சித் துறையைப் பற்றியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, பேசுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பி, அதற்கு மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர், மாண்புமிகு திரு. ராஜேந்திர சிங் தோமர் அவர்கள் அது சம்பந்தமாக ஒரு பதிலைத் தந்திருக்கின்றார்கள். அதாவது, உள்ளாட்சித் தேர்தலை நடத்தாத காரணத்தினால் 2016–2017 ஆம் ஆண்டு நிதியாண்டிலிருந்து*